**தலைப்பு 187 - முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை– 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்திமுதல் 2 ஆம் பந்தி வரை அமைச்சின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தியின் தலைப்பிற்குரிய கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்படுகின்றன.

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

---

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிஅறிக்கை, இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2015 ஒக்தோபர் 28 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தினை கொண்டு காணப்படுகின்றது.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணிவருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### மொத்த நிதியேற்பாடும் செலவும்

அமைச்சிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 174.00 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதிவரையில் இதில் ரூபா 142.10மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் அமைச்சின் தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 31.90 மில்லியன் அல்லது 18.33 சதவீதமான நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறாகும்.

| | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| செலவினம் | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 125.29 | 99.23 | 26.06 | 20.80 |
| மூலதனம் | 48.71 | 42.87 | 5.84 | 11.99 |
| **மொத்தம்** | **174.00** | **142.10** | **31.90** | **18.33** |

### 2.2 முற்பணக் கணக்குகள்

#### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

#### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்

அமைச்சிற்கு உரித்தான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான தொகைகள் பின்வருமாறாகும்.

| விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| ---- | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 187 | 2.00 | 1.65 | 0.3 | 0.76 | 10 | 2.53 |

## 2.3 பொதுவைப்புக் கணக்கு

அமைச்சினால் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொதுவைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 14.9 மில்லியன் ஆகும்.

## 2.4 கணக்காய்வு அவதானிப்புகள்

2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள் 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்களுக்குட்பட திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள அவதானிப்புகளில் பொருண்மையான மற்றும் முக்கியமான அவதானிப்புகள் 3.1 மற்றும் 3.8 ஆம் பந்திகளில் காண்பிக்கப்பட்டுள்ளன.

# 3. தலைப்பு 187 –முதலீட்டுஊக்குவிப்புஅமைச்சு

## 3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

அமைச்சினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ஆ) | கணனி, உப பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/2 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றுநிருபம் |
| (இ) | பெறப்படும் காசோலைகள், காசுக்கட்டளைகள் போன்றவற்றுக்கான பதிவேடு | நிதிப் பிரமாணம் 451 |
| (ஈ) | மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 454(2) |
| (உ) | நட்டங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |
| (ஊ) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |
| (எ) | அடியிதழ்சேர் புத்தகங்கள் | நிதிப் பிரமாணம் 341 |
| (ஏ) | வாகன சம்பவத்திரட்டு புத்தகம் | நிதிப் பிரமாணம் 1645 (அ) |
| (ஐ) | வாகனங்களின் நிரல்படுத்தல் பதிவேடு | நிதிப் பிரமாணம் 1647 (உ) |
| (ஒ) | கொள்வனவுக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் வருகைப் பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவை |

## 3.2 கணக்காய்விற்கானசான்றுகளின்மை

அறிக்கையிடப்பட்டுள்ளவாறு அமைச்சிற்குரிய நிதிப் பிரமாணம் 272(2) இன் பிரகாரம் பணிகள் பூர்த்திசெய்யப்படாத ரூபா 4,750 பெறுமதியான கொடுப்பனவு உறுதிச்சீட்டொன்று தொலைந்து போயிருந்தது.

**3.3 ஒதுக்கீட்டு கணக்கு**

---------------------------

**பாதீட்டு முரண்**

----------------------

16 செலவின விடயங்களுக்கு மிகை நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்த காரணத்தால், நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதிஏற்பாட்டில் 20 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்செல்லையினை கொண்டிருந்தது.

**3.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

---------------------------------------------------------

**3.4.1 வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம்**

---------------------------------------------------------

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், அமைச்சினால் வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட வேண்டுமெனினும், மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4.2 வருடாந்த கொள்வனவுதிட்டம்**

-------------------------------------------

2016 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்கதேசியபாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்தகொள்வனவுதிட்டம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதிவரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4.3 உள்ளகக் கணக்காய்வு**

----------------------------------

நிதிப் பிரமாணம் 133 இன் பிரகாரம் உள்ளக்ககணக்காய்வு பிரிவொன்று தாபிக்கப்பட்டிராததுடன் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிக்கவில்லை.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

-------------------------------------------

**வருடாந்தபொருள் மெய்மையாய்வினை நடாத்துதல்**

------------------------------------------------------------------------

2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், 2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வினை நடாத்தி அந்த அறிக்கை 2015 மார்ச் 17 ஆந் திகதிக்கு

முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டுமெனினும் அமைச்சினால் 2015 மே 31 ஆந் திகதி வரையிலும் அந்த அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

### 3.6 தீர்க்கப்படாத பொறுப்புகள்

அமைச்சினால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத வருடமொன்றிற்கு குறைந்த காலமாக நிலவிவரும் பொறுப்புகளின் கூட்டுத்தொகை ரூபா 36,820,200 ஆகும்.

### 3.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகள் என்பனவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|
| | ரூபா | |
| **(அ) சனாதிபதி செயலகத்தின் சுற்றறிக்கை** | | |
| 2010 மே 14 ஆந் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க சனாதிபதி செயலகத்தின் சுற்றறிக்கை | - | அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர்களின் பாவனைக்கென ஒதுக்கப்பட வேண்டிய ஆகக்கூடிய உத்தியோகபூர்வ வாகனங்களின் எண்ணிக்கை 03 ஆக இருந்ததெனினும், அமைச்சர் 05 உத்தியோகபூர்வ வாகனங்களையும், பிரதிஅமைச்சர் 6 உத்தியோகபூர்வ வாகனங்களையும் பயன்படுத்தியிருந்தனர். |
| **(ஆ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவை** | | |
| 2.14 வழிகாட்டல் | 124,000 | அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாககைத் தொலைபேசியொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. |

**3.8 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | **ஊழியர் வகை** | **அங்கீகரிக்கப்பட்ட பதவியணி** | **உள்ளபடியான பதவியணி** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 07 | 05 | 02 |
| (ii) | மூன்றாம் நிலை | 18 | 11 | 07 |
| (iii) | இரண்டாம் நிலை | 02 | 02 | - |
| (iv) | ஆரம்பநிலை | 14 | 13 | 01 |
| | **மொத்தம்** | **41** | **31** | **10** |